www.xtrapapers.com

N16/2/ABTAM/SP1/TAM/TZ0/XX/T

Diploma Programme
Programme du diplôme
Programa del Diploma

# Tamil B – Standard level – Paper 1
# Tamoul B – Niveau moyen – Épreuve 1
# Tamil B – Nivel medio – Prueba 1

Friday 4 November 2016 (afternoon)
Vendredi 4 novembre 2016 (après-midi)
Viernes 4 de noviembre de 2016 (tarde)

1 h 30 m

---

**Text booklet – Instructions to candidates**

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for paper 1.
- Answer the questions in the question and answer booklet provided.

**Livret de textes – Instructions destinées aux candidats**

- N'ouvrez pas ce livret avant d'y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l'épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

**Cuaderno de textos – Instrucciones para los alumnos**

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.

8816 – 2331

8 pages/páginas

© International Baccalaureate Organization 2016

International Baccalaureate
Baccalauréat International
Bachillerato Internacional

www.xtrapapers.com



Blank page
Page vierge
Página en blanco

www.xtrapapers.com



**பனுவல் A**

# தஞ்சையில் பசுமைத்திட்டம்

❶ தமிழ் நாடு, தஞ்சை மாவட்டத்தில் ஒரு காலத்தில் காடுகள் நிறைந்திருந்தன. ஆனால் இப்போது படிப்படியாகக் குறைந்து சொற்ப எண்ணிக்கையில்தான் காடுகள் உள்ளன. விவசாய பூமியான தஞ்சையில் காடுகளின் பரப்பளவு குறைந்ததால் மழையளவும் வெகுவாகக் குறைந்துள்ளது.

❷ இச்சிக்கலைத் தீர்க்கத் தஞ்சை மாவட்ட நிர்வாகம் அதிகளவில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. மக்களிடம் மரம் வளர்க்கும் ஆர்வத்தை வளர்க்கவும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் தஞ்சை முழுவதும் பல இடங்களில் பல லட்சக்கணக்கான மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இந்த முயற்சிக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்புக் கிடைத்துள்ளது.

❸ தஞ்சை மாவட்டம் முழுவதும் 46 இடங்களில் நர்சரிகள் அமைக்கப்பட்டன. வனத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறைப் பணியாளர்களின் உதவியுடன் நர்சரிகளில் விதைகளிலிருந்து கன்றுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அங்கு வளர்க்கப்பட்ட மரக்கன்றுகள் அந்தந்த நர்சரிக்கு அருகில் உள்ள இடங்களில் நடப்பட்டன. மேலும், அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள் பலருக்கும் மரக்கன்றுகள் நடுவதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

❹ “இதுபோன்ற திட்டங்களின் மூலமாக மரக்கன்றுகளைப் பெரிய அளவில் நடுவதால் பத்து ஆண்டுகளில் தஞ்சையில் மழை பொழிவு நிறைவாக இருக்கும்; நீர்ப் பற்றாக்குறை என்பதே இருக்காது. இதனால், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் தூய்மையான காற்றையும் மக்கள் சுவாசிக்க முடியும்,” என்று இத்திட்டத்தால் விளையக்கூடிய பயன்கள் குறித்துத் தெளிவாக விளக்கினார் தஞ்சை மாவட்ட ஆட்சியர் சுப்பையன் அவர்கள்.

❺ இந்தத் திட்டத்தின் தொடக்கவிழாவை எப்படி நடத்தத் திட்டமிட்டுள்ளீர்கள் என்று அவரிடம் கேட்டபோது, “எப்போதும் செய்வது போன்றே வெறும் மரம் நடும் விழாவாகச் செய்தால் மக்களிடம் அதன் **[ – X – ]** நீடித்திருக்காது. ஒரு பெரும் நிகழ்வாக இதைச் செய்தால் மக்களிடையே பெரும் உற்சாகத்தை அது **[ – 5 – ]**. மேலும், சில இடங்களில் மட்டும் மரம் நடுவதால் பெரிய அளவில் **[ – 6 – ]** கிடைக்காது. ஒரே நாளில் ஒரே நிகழ்வாக அனைத்து மரக்கன்றுகளையும் நடும்போது மக்கள் பலரின் பங்களிப்பு அதில் **[ – 7 – ]** இருக்க வழி உண்டு. இதனால், பெரிய அளவில் விழிப்புணர்வும் ஏற்பட **[ – 8 – ]** உண்டு,” என்று விவரித்தார் சுப்பையன்.

S. Veeramani, *Puthiya Thalaimurai* (2014)

www.xtrapapers.com



**பனுவல் B**

# சத்யஜித் ராய்

உலகளவில் இந்தியத் திரைப்படங்களுக்கு ஓர் அறிமுகத்தை ஏற்படுத்தித் தந்தவர் சத்யஜித் ராய்தான்! அவரது முதல் படமான "பதேர் பாஞ்சாலி" வெளிவந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்ட போதும் அது இன்றளவும் பாரத மண்ணின் யதார்த்த வாழ்க்கைப் பிரதிபலிப்பாகவே அமைந்துள்ளது.

"நாட்டின் வறுமையைப் படமெடுத்துக் காட்டி மேலை நாடுகளில் பிரபலமடைந்தவர்" என்று அவரை விமரிசித்தவர்கள் ஏராளம். ஆனால், அப்படிக் கூறியவர்கள் யாருமே அவரது மூன்று அல்லது நான்கு படங்களைக்கூடப் பார்க்காதவர்களாகத்தான் இருந்தார்கள். ஏனெனில், அவர் உருவாக்கிய முப்பது முழுநீளப் படங்களில் மூன்றில் மட்டுமே வங்க மாநிலத்தில் நிலவிய வறுமையைக் கருப்பொருளாக அமைத்திருந்தார் ராய்! அதுவும் கடந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளிலும், இரண்டாம் உலகப்போர் நடந்த ஆண்டுகளிலும் உண்மையாக நிலவிய வறுமையைத்தான் அவர் படம் பிடித்துக் காட்டினார். அவரது முப்பத்தாறு வருடப் படைப்புப்பணி என்பது ஒரு நூற்றாண்டுக்கும் மேலான இந்திய நாட்டின் சமூக மாற்றங்களின் வரலாற்றுப் பதிவு என்பதாகவே பலரும் கருதுகிறார்கள்.

சத்யஜித்ராய் கல்கத்தா நகரில் 1921-ஆம் ஆண்டில் பிறந்தார். அவரது குடும்பம் மிகவும் வசதியானது. கல்கத்தாவின் மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற பிறகு, ரவீந்திரநாத் தாகூர் தோற்றுவித்த "சாந்தி நிகேதனில்" நுண்கலைத் துறையில் பட்டயமும் பெற்றார். அங்குதான் ஓவியத்திலும் பாரம்பரிய இசையிலும் தமக்கிருந்த ஈடுபாட்டை வளர்த்துக்கொண்டார். பிற்காலத்தில் அவை அவருடைய படைப்புப்பணிகளுக்குப் பெருந்துணையாய் அமைந்தன.

கிராமங்களையே பார்க்காமல் நகர்ப்பகுதியில் வளர்ந்து, படித்தும் பணியாற்றியும் வந்த சத்யஜித் ராய் தம் முதல் படத்துக்காகத் தேர்ந்தெடுத்தது ஒரு சிறிய கிராமத்தில் நடக்கின்ற கதையைத்தான்! படப்பிடிப்புக்காகக் கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு நிலவிய ஏழ்மையை வெளிக்காட்டும் வகையில் குறைந்த செலவில் யதார்த்தமான சுற்றுச்சூழலை உருவாக்கும் முயற்சியில் அவர் பெருஞ்சிரமத்தை எதிர்கொண்டார். செயல் அவருக்கு உலகளவில் பெரிய அங்கீகாரத்தைப் பெற்றுத்தரும் என்று அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. இப்படத்துக்காகத் தமது சேமிப்பு முழுவதையும் பயன்படுத்திக்கொண்டார். தம் மனைவியின் நகைகளை அடைமானம் வைத்தே படப்பிடிப்பைத் தொடங்கினார்.

www.xtrapapers.com



பணப்பற்றாக்குறையினால் அதை நிறுத்த வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. பொழுதுபோக்கு அம்சம் எதுவுமில்லாத படம் என்பதால் திரைத்துறையினர் எவரும் பணவுதவி செய்ய முன்வரவில்லை. அந்த இக்கட்டான சூழ்நிலையில் அன்றைய மேற்கு வங்க அரசு படத்தை முடித்து வெளியிடும் அளவிற்கு நிதியாதரவு கொடுத்து உதவியது.

படப்பிடிப்பு மீண்டும் தொடரப்பட்டு, 1955-ஆம் ஆண்டுப் படம் வெளியானது. ஒரு கிராமத்தில் ஒரேயொரு வீட்டிலும் வெளிப்புற இடங்களை மட்டுமே கொண்டு உருவான “பதேர் பாஞ்சாலி” மிகப்பெரும் வெற்றியடைந்து இன்றுவரை மேற்கு வங்க அரசுக்கு வர்த்தக ரீதியாக இலாபத்தை ஈட்டித் தந்துகொண்டிருக்கிறது. அத்துடன், 1956 முதல் 1966 வரை உலகின் பல்வேறு நாடுகளில் நடந்த பன்னிரண்டு சர்வதேசப்பட விழாக்களில் சிறந்த படத்துக்கான விருதையும் அது வாரிக் குவித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சாதனையை முறியடிக்கும் அளவுக்கு எவரும் திரையுலகில் இதுவரை தோன்றவில்லை என்பதே உண்மை.

Sivasubramaniam, *Kalaimagal Magazine* (2008)

www.xtrapapers.com



**பனுவல் C**

# ஆபத்து விளைவிக்கும் பொருள்கள்

**[ – X – ]**

பிளாஸ்டிக் பயன்பாடு எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. சிறியவர் முதல் பெரியவர் வரை பிளாஸ்டிக் பொருள்களைப் பல்வேறு விஷயங்களுக்காகப் பயன்படுத்துகிறார்கள். சுற்றுச் சூழல் விழிப்புணர்வு பற்றிப் பல செய்திகள் வெளியாகும் நிலையில், நம் உடலுக்கும் உயிருக்கும் கேடு விளைவிக்கக்கூடிய பிளாஸ்டிக் தூக்குப்பைகளை நம்மில் பலரும் இன்னமும் பயன்படுத்திக்கொண்டுதான் இருக்கிறோம்.

**[ – 25 – ]**

பள்ளி செல்லும் பிள்ளைகள் பல வண்ணங்களில் பிளாஸ்டிக் டப்பாக்களில் உணவு கொண்டு செல்கிறார்கள். ஆனால், இந்தப் பிளாஸ்டிக் டப்பாக்கள் விபரீதத்திற்கு வித்திடுகின்றன என்று அண்மைய மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொதுவாகப் பிளாஸ்டிக்குகளிலிருந்து பிபிஏ எனப்படும் வேதிப்பொருள் வெளியாகிறது. இது உடலில் ஹார்மோன் பிரச்சினைகளை உருவாக்குவதோடு, நரம்பு சார்ந்த பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன என்று எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்.

**[ – 26 – ]**

நம்மில் பலரும் ஒருமுறை தண்ணீர்ப் புட்டியை வாங்கினால் அதைப் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிவதில்லை. மீண்டும் மீண்டும் அதில் தண்ணீர் நிரப்பிப் பயன்படுத்துகிறோம். இதுவும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய செயலாகும். பிளாஸ்டிக் புட்டிகளைத் தவிர்த்துப் பிபிஏ பாதிப்பு இல்லாத புட்டியாகப் பார்த்து வாங்கிப் பயன்படுத்துவது நலம் பயக்கும்.

**[ – 27 – ]**

நாம் உணவு கொண்டு செல்லும் பிளாஸ்டிக் டப்பாக்களிலும் இந்தப் பாதிப்பு உண்டு. சூடான உணவைச் சமைத்து அதனைப் பிளாஸ்டிக் டப்பாக்களில் எடுத்துச் செல்வதால், உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருள் உணவோடு கலந்துவிடுகிறது. இந்த ஆபத்தைப் பலரும் உணர்வதில்லை.

www.xtrapapers.com



**[ – 28 – ]**

மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் மற்றொரு பொருள் நான்ஸ்டிக் என்னும் ஒட்டாத தவா ஆகும். அதுவும் ஆபத்து நிறைந்தது என்னும் அதிர்ச்சி தகவல் இப்போது வெளியாகியுள்ளது. தமிழ்நாட்டைச் சார்ந்த பெரியார் பல்கலைக்கழக உயிர்த் தொழில்நுட்பவியல் துறையினர் நான்ஸ்டிக் தவா தொடர்பான பாதிப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். நான்ஸ்டிக் தவாவை வெப்பப்படுத்தும்போது அதிலிருந்து பாலிடெட்டா புளோரா எத்திலீன் என்னும் வாயு வெளியாவதாகவும், அது தவாவில் சமைக்கும் உணவுகளிலும் கலந்துவிடுவதாகவும் கண்டறிந்துள்ளனர். அந்த உணவை உண்ணும்போது மனிதர்களுக்குப் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, பெண்களுக்குக் கருவளர்ச்சி பாதிப்பு ஏற்படும் ஆபத்தை இந்த ஆய்வின்வழிக் கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வில் ஈடுபட்டோர், நான்ஸ்டிக் தவாக்களை வெப்பப்படுத்தி அதிலிலிருந்து வெளிப்பட்ட வாயுக்களைச் சேகரித்தனர். பிறகு அந்த வாயுக்களைச் சீரான வெப்பத்தில் குழாய் மூலம் நீரில் இருந்த மீன்களுக்குச் செலுத்தினர். அவ்வாறு செய்ததன் காரணமாக மீன்களின் கரு வளர்ச்சியும், உடற்கூறு அமைப்பும் வெகுவாகப் பாதிப்படைவதைக் கண்டறிந்தனர். மேலும் ஆய்வுகளைப் பலமுறை மேற்கொண்டு முடிவுகளை உறுதிப்படுத்தினர்.

Dr S Senthilkumar, *Unavu Nalam* (2013)

www.xtrapapers.com



**பனுவல் D**

# மனம் விட்டுப் பேசுவோம்

ஒருகாலத்தில் கூட்டுக்குடும்பங்கள் நிறைய இருந்தன. குடும்ப உறுப்பினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பஞ்சமே இருக்காது. ஆனால், இன்று தனிக்குடும்பங்கள் அதிகம் தோன்றிவிட்ட பிறகு, பெரும்பாலும் குறைவான உறுப்பினர்களே ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் இருக்கும் தருணங்களில் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுப் பேசிப் பழகுவது மிகக் குறைவு. வீட்டில் இருக்கும் போது பலரும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் இணையத்தில் நேரத்தைச் செலவிடுவதிலும் மட்டுமே நாட்டம் கொள்கின்றனர். இதனால், வீட்டுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் அந்நியமாகிப் போகும் அவலம் இன்று அதிகமாகவே காணப்படுகிறது.

வீட்டிலேயே இந்த நிலை என்றால், அக்கம்பக்கத்து வீட்டாருடன் இருக்கும் உறவு பற்றிக் கேட்கவே வேண்டாம். இன்றைய சூழலில் அடுத்த வீட்டில் இருப்பவர்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் அறியாமையில் இருப்பவர்கள் நிறையப் பேர் உண்டு. இது எப்படி ஆரோக்கியமான சமூக பிணைப்புக்கு வழிவகுக்கும்? மற்றவர்களோடு பழகவோ உறவாடவோ நேரம் இல்லாதபோது மனித உறவு எப்படி மேம்படும்?

இந்நிலைமை பெரியர்களைவிடக் குழந்தைகளையே அதிகம் பாதிக்கிறது. இன்றைய கல்விமுறையும் தேர்வு மதிப்பீடுகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை நல்ல பண்புநலன் வளர்ச்சிக்குக் கொடுப்பதில்லை. ஓடியாடி விளையாடும் வயதில் குழந்தைகள் வீட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பல மணிநேரத்தை வீணாக்கும் கொடுமை பல குடும்பங்களில் நடக்கின்றன. ஒரு காலத்தில் குழந்தைகளின் அறிவுப் பெருக்கத்திற்கு உதவிய நூல் வாசிப்புப் பழக்கமும் இன்று குறைந்துகொண்டு வருகிறது. மாறாக, குழந்தைகள் தொலைக்காட்சியிலும் இணையத்திலும் மூழ்கிப்போய்ப் பயனுள்ள நேரத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் குறைபாட்டைப் போக்க, குடும்பத்தினருடன் பேசி மகிழவும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் நாம் நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். அதற்குப் பெற்றோர்களே நல்ல முன்மாதிரிகளாக விளங்க வேண்டும். ஒவ்வொரு நாளும் உறுப்பினர்கள் ஒன்றுகூடி உணவருந்தி உரையாடி மகிழ்வதை வழக்கமாகக் கொள்ள வேண்டும். மேலும், அண்டை அயலாருடன் நல்லுறவு கொண்டு பேசி உறவை மேம்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பண்டிகை நாள்களில் அண்டை அயலாரை வீட்டிற்கு அழைத்து உபசரித்து மகிழ்விக்கும் பண்பாட்டை உயிர்ப்பிக்க வேண்டும். "குடும்ப தினம்" முதலான சமூக நிகழ்ச்சிகளில் ஆர்வத்தோடு கலந்துகொள்ள நேரம் ஒதுக்க வேண்டும். அது நம் நட்பு வட்டாரத்தைப் பெருக்கிக்கொள்ள உதவுவதுடன் நம் வாழ்க்கையையும் பயன்மிக்கதாக மாற்றும்.

http://enganeshan.blogspot.in (2013)